1979 அக்டோபர் 31]

தொகைகளைப் பரிசாக வழங்கும் முறையில் அந்தத் திட்டத்தைத் திருத்தியமைத்து அதிகப்படியான பேர்களுக்குப் பரிசு கிடைக்க ஏற்பாடு செய்யும் திட்டம் உண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) ; இப்போது சாதாரண குலுக்கலில் முதல் பரிசு 50,000 ரூபாய் தான் வழங்கப்படுகிறது.

திரு. க. மருதாசலம் : இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு என்பதை மாண்புமிகு பேரவைச் செயலர் அவர்கள் அறிவார்கள். அதையொட்டி இந்த ஆண்டு சிறப்புக் குலுக்கலை கோவையில் குலுக்க முயற்சிப்பார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): இந்த ஆண்டு குலுக்கல் சென்னையில் குலுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு குலுக்கப்படும் இந்த விசேஷ பரிசுச் சீட்டு எத்தனை வரிசைகள் வெளியிடப்படும்? அந்த வருவாய் எதற்காகச் செலவழிக்கப்படும்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) : ஐந்து வரிசைச் சீட்டுகள் வெளியிடப்படும். அந்த வருவாய் முழுவதும் குழந்தைகள் நலன் பேணும் திட்டங்களுக்காகப் பயன் படுத்தப்படும்.

மாநில நிலவள வங்கி உதவி தொழில் நுட்ப மேலாளர்கள்.

*வினா 43—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியில் கடந்த மூன்றாண்டு காலமாக பணிபுரிந்து வந்த உதவி தொழில் நுட்ப மேற்பார்வையாளர்கள் பதவி மூப்பு (Seniority) பார்க்கப்படாமல் கூட வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) அவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக உதவியுடன் செயல்படும் சிறுபாசன மற்றும் சிறு பாசனமல்லாத திட்டங்களில், திட்டங்களை அமுல் படுத்த தொழில் நுட்ப மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு

திட்டத்திற்கும் தனித்தனியாக அத்திட்டப் பணிக்காகவே தற்காலிகமாக அமர்த்தப்படுகின்றனர். குறிப்பிட்ட திட்டம் முடிவடைந்ததும், இத்திட்டத்தில் பணியாற்றும் மேற்பார்வையாளரை பணி நீக்கம் செய்ய நேரிடுகிறது. ஆகையால் இதில் பணிமூப்பு பற்றிய பிரச்சினைக்கு இடமில்லை.

(இ) விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக உதவியுடன் புதிய திட்டங்கள் துவக்கப்படும்போது அதில் உண்டாகும் வேலை வாய்ப்புகளில், பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள தொழில் நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு தமிழ்நாடு மாநில நிலவள வங்கி முன்னுரிமை அளிக்கிறது.

உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பங்காடி.

*வினா 44.—திரு. கே. உச்சி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பங்காடி நஷ்டத்தில் நடந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நஷ்டம் எவ்வளவு?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) (31-12-78 அரையாண்டு முடிந்த அறிக்கையின்படி ரூ. 8,07,357.37.

(இ) நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு தனி அலுவலர் நியமிக்கப்பட்டும் பழைய, மற்றும் கெட்டுப்போன சரக்குகளை விற்று முடங்கிக் கிடக்கும் மூலதனத்தை திரும்பிப் பெறவும், சரக்கு இருப்புக் குறைவுத் தொகையை வசூலிக்க சம்பந்தப்பட்டவர்கள் மீது தாவா தொடரப்பட்டும், பெற்ற தீர்ப்புகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டும் நட்டத்தில் இயங்கும் கிளைகளை மூடிவிடவும், புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் மாநில, மத்திய அரசுகளிடமிருந்து கடன் உதவி பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, அங்கே வியாபாரத்தில் ஏற்படும் நட்டத்திற்கு அங்கே உள்ள நிர்வாகிகளும் ஊழியர்களும் பொறுப்பு என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அவைகளை எல்லாம் ஆராய்வதற்காகத்தான் தனி அலுவலர் நியமிக்கப்பட்டு 8 முனைகளிலே அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.